சேலம் மாவட்டம், ஓமலூரிலுள்ள தோல் சந்தையை வேறு இடத்திற்கு மாற்றுதல்.

247—(*வினா எண்.10079) திரு. கே. அன்பழகன்: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூரில் தற்போது புதிதாகக் கட்டப்பட்டு வரும் பஸ் நிலையத்திற்கு அருகில் சுகாதாரக் கேடாக இருக்கும் தோல் சந்தையை வேறு இடத்திற்கு மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது மாற்றப்படும் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

திரு. கே. அன்பழகன் : தலைவரவர்களே, ஓமலூரில் அரசு தற்போது கட்டிவரும் புதிய பேருந்து நிலையத்திற்கு அருகில் தோல் சந்தை இருக்கிறது. அங்கிருந்து வெளியாகும் கழிவுநீர், கழிவுப் பொருளால் அந்தப் பகுதியின் சுகாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது. மேலும் தோல் சந்தையிலிருந்து வீசுகின்ற கெட்ட நாற்றத்தினால் அங்கே காத்திருக்கின்ற பஸ் பயணிகளுக்கு சுகாதார பாதிப்பு ஏற்படுகிறது. ஆகவே, பொது மக்கள் நலன் கருதி புதிய பஸ் நிலையத்திற்கு அருகிலிருந்து அந்த தோல் சந்தையை மாற்ற நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அது தோல் வணிகம் நடைபெறுகின்ற இடமே தவிர தோல் பதனிடும் இடம் அல்ல. இருப்பினும் கழிவு நீரையும் கழிவுப் பொருளையும் அகற்ற வேண்டியது அந்தப் பேரூராட்சியின் பொறுப்பாகும். அந்தப் பேரூராட்சி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திரு. கே. அன்பழகன் : தலைவரவர்களே, தோல் சந்தையி லிருந்து உப்புநீர் வெளி வருவதால் புதிய பேருந்துக் கட்டடம் பாதிக்கும் என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எஞ்சினீயராக இருப்பதால் தெரியும் என்று கருதுகிறேன். ஆகவே, பொதுமக்கள் நலன் கருதி அந்தப் பேரூராட்சிக்கு அறிவுரை கூறி, அந்தத் தோல் சந்தையை அங்கிருந்து அகற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விருப்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, எஞ்சினீயருக்குத் தெரிந்து பயனில்லை ; அந்தப் பேரூராட்சிக்குத் தான் தெரிய வேண்டும்.